எல்லாப்புகழும் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே

# எங்கள் உரை

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும்

எங்களின் பேரன்பிற்கும். பெருமதிப்பிற்குமுரிய அருமைத்தந்தை மர்ஹூம் அல்ஹாபிஸ, அல்ஹாஜ் பாவையம முஹம்மது அப்துர் ரஹீம் ஆலிம் ஸதகலிய்யி அவர்கள் தம வாழ்நாளில்

எமது அருமைப் பாட்டனாராகிய அண்ணல் ஸாம் ஷிஹாபுத்தீன் ஒலியுல்லாஹ் அவர்கள் இயற்றியருளிய பாமாலைகளில், அதன செழுமிய கருத்துக்களில், அதனை நம் சமுதாய மக்களிடையே அதிலும் குறிப்பாகப் பெணகளிடையே பரப்பி மறுமலர்ச்சி காணச்செய்யவேண்டும் என்ற தளராத முயற்ச்சியில் ஈடுபாடுடையவர்களாக இருந்தார்கள்

அவர்களின் அயராத முயற்சியின் விளைவாக அண்மையில் "**நஸீஹத்து மாலை**" அவர்களால் வெளியீடு செய்யப் பட்டது. அதைத் தொடர்ந்து பல மாலைகளை வெளியிட வேண்டுமென்ற ஆர்வத்துடன் இருந்துவந்தநிலையில் கடந்த துல்ஹஜ் பிறை 13-1393 (19—1—1973) வெள்ளிக்கிழமை வல்லஇறைவன அவர்களைத்தன்பால் அழைத்து கொண்டான் (அவர்களை இறைவன் பொறுத்துப் பொருந்திக்கொள்வானாக) எனவேதான்

அவர்கள் இட்டுச்சென்ற அரியபணியினை இனிதுபட நிறைவேற்றிவைப்பது எங்கள் கடமை என்பதை நினைவிற் கொண்டு அவர்கள் நினைவாக இன்று இந்தத் "**தோகை மாலை**"யை வெளியீடு செய்வதிலே பெரிதும மன நிறைவு எய்துகிறோம்.

இதனைக் கண்ணேற்றி, நாவேற்றி, கருத்தினை நெஞ்சிலேற்றிச் சிறப்படைய வேண்டுமாய் உங்களைக் கேட்டுக்கொள்வதோடு இந்தத் **தோகைமாலை** வெளியீட்டின் மூலவராகிய எங்களருமைத்தந்தையவர்களின் மேலுலக நல் வாழ்வுக்காக இதயமார இறைஞ்சும்படியும் பணிவன்புடன் கேட்டுக்கொளகிறோம்.

இதனை நல்லெண்ணத்தின் அடிப்படையில் வெளியீடு செய்துள்ள எங்களுக்கும், இதனை வெளியீடு செய்வதிலே பெரிதும் உறுதுணையாய் நின்ற நண்பர்களுக்கும், மற்றும் இதனைப்பாடிப் பயன் பெறவிழைகின்ற அனைவருக்கும் எல்லாம் வல்ல ஏகன் இகத்திலும் பரத்திலும் இனிய நலன்கள் பல புரிவானாக ஆமீன்.

இங்ஙனம்,

"றஹ்மத் மன்ஸில்"
தைக்காத்தெரு
**காயல்பட்டணம்**

**அன்புமக்கள்,**
*மற்றும்*
குடும்பத்தினர்

காயல்பதிதந்த கண்ணியமிகு மாமேதை, இறையருளின் செம்மல்,
இனியதமிழ்க் கவிஞர்

# அல்லாமா
# ஸாம் ஷிஹாபுத்தீன் ஒலியுல்லாஹ் (ரலி)

அவர்களின் பாமாலைகளில் ஒன்றாகிய

# தோகை மாலை.

1) ஆதி திருநாமம் தன்னைக் கொண்டும்
ஆல நபி ஸல வாத்தைக் கொண்டும்
நீதியருட்படி தோகைமாலை
நிகழ்த்துறேன் கேட்டு நடப்பீர்களே.

2) இந்த தோகையின் மாலை தனை
இனிதாகக் கேட்டு நடந்து கொண்டால்
அந்தமுடன் ஆதி கிறுபை யுண்டாம்
ஆலநபிமகள் ஷபாஅத் துண்டாம்

3) புந்தி மகிழ்ச்சியாய்ப் புருஷன் சொல்லை
புகழாகக் கேட்டு நடந்த பேர்க்கு
வந்திறங்கிடும் ஒரு மாளிகை
வாகாய் முஹம்மது நபியுரைத்தார்.

4) அன்பாய்க குணமாக புருஷன் சொல்லை
அழகாகக் கேட்டு நடந்த பேர்க்கு
நப்பு மணவானன் சொல்லைக் கேட்டு
நன்கு சறுகாமல் நடந்த பேர்க்கு

5) துன்ப மணுகாம லிருப்பாளென்றும்
தூய்யோன் கிருபைதான் தப்பா தென்றும்
வம்புக் குணஞ்சேரா நபியிரசூல்
வருசையுள வாயால் வாழ்த்தினரே

அந்தம் - அழகு. புந்தி - உள்ளம்.

6) வாகாய் புருசன் தான் மனமகிழ
வந்து களிகூர்ந்து இருப்பாளாகில்
ஆகமுடை போன் தான் ஒருமுத்திறுல்
அன்பாய்ச் சமைத்ததோர் மானிகையை

7) சாகான் கொடுப்பானென்றே பாத்திமா
சங்கை யுளவாயா லாணையிட்டார்
தோகை மாருக்கு உயர்கருமம்
சொல்லித் திருவுளம் பற்றினரே

8) கணவன் சொல்தட்டி பாலனுக்கு
கையா லெடுத்துத்தான் பால்கொடுத்தால்
நிணமாம் மூளை தான் கொதிக்க உம்பர்
நெருக்கி அடிப்பார்கள் சுக்மா றினுல்

9) தணலாய் எரிகின்ற நரகத்திலே
தகிக்கும் நிலையிலே கிடந்ததாயும்
அனேகம் காலமாய்ப் ப்டுவாளென
ஆலநபி வாயால் ஆணையிட்டார்

10) அல்லும் பகலுமா யஞ்சுநேரம்
அஞ்சி ஒழுகியே தொழுதாலுமாம்
வல்லி புருசனின் சொல்தட்டினுல்
வரிசை மலக்குக்கு ஆகாதென்றும்

11) கல்லை மிகவுள்ள நரகத்திலே
கடிய அதாபுகள் படுவாளென்றும்
வல்ல புகழ்நபி சொன்னுரென
வரிசை உலமாக்கள் வகுத்தனரே

---

ஆகமுடையோன் - வேதம்தந்த இறைவன்
சாகான் - இறைவன். கல்லை - கவலை.



12) தாய்ப் பேச்சைக்கேட்டு புருசன்சொல்லை
தட்டி நடந்திடும் தோகையவள்
ஆயும் கியாமத்து நாளதிலே
அதாபு மிகப்படு வாளெனவே

13) நாயன் குர்ஆனில் இறக்கிவைத்தான்
நம்பு மனிதரே இதையறித்து
சாகா னருட்படி புருசன் சொல்லை
சங்கையுடன் கேட்டு நடப்பீர்களே

14) வாழு மகள்தனை வரவழைத்து
வழிகெட்ட இபுலீசைப் போலே
கோளும் கொடுமையும் தான்சொல்லியே
கணவன் தனைவிட்டும் பிரித்தபேர்க்கு

15) ஏழுநரகத்து அதாபை யெல்லாம்
இறையோ னவளுக்கு அளிப்பானென்றும்
தாழும் மங்கையர் தங்களுக்கு
தம்பிரான் நபி சாற்றினரே

16) பெற்ற மகள் தனைப் புருசனுடன்
பிரியமாய் வாழ விடாதவர்க்கு
குற்றம் மிகஉண்டாம் குழியிலேதான்
குணமாய் நடப்பீரே கோதையரே

18) புருசன் மனதுக்கு பிடித்தசெயல்
பூவைமார் செய்ய வேணுமென்று
வருசை மிகவுள்ள நபி இரசூல்
வாழும் மனிதர்க்கு வகுத்தாரென்றும்

19) திருவின் புலி அலி உரைத்தாரென்றும்
ஜெகத்தின் உலமாக்கள் செப்பலுற்றார்
கருகும் நரகத்து அதாபுக் கஞ்சி
கண்டு நடப்பீர்கள் பெண்டிர்களே

20) கொண்ட புருசனைக் கலைப்பாளையும்
குணமாய் நடக்காமல் இருப்பாளையும்
வென்றி யுடையவன் கியாமத்து நாள்
வேகும் நரகத்தில் விடுவானென

21) பண்டு நபிசொன்ன புத்தியதால்
பாங்கா யிதுசேட்டு நடந்துகொண்டால்
நன்று மிகவுண்டாம் அவளுக்கென
நாயன் திருவுளம் பற்றினனே

22) பிதாவை யன்னையை ஆதரித்து
புருசன் தன்னையே புறக்கணித்தால்
அதாபு மிகவுண்டாம் கப்ரிலென
ஆல நபி வாயால் அருளிச்செய்தார்

23) குதாவி னருட்படி நடந்தபேர்க்கு
குன்றாப் பெருவாழ்வு கிடைக்குமென்லும்
கிதாபு தனில்வந்து இருக்குதென
கீர்த்தி உலமாக்கள எடுத்துரைத்தார்.

24) கொண்ட புருசன்தான் இருக்கையிலே
கொள்கை யுடன்வேறு சோரிஞுக்கால்
பன்றி முகம்போலே இறுதிநாளில்
பளீஹத்து மிகப் படுவாளென



25) வென்றி மிகவுள்ள நபியுரைத்தார்
வெறுப்பாங் குணம்விட்டு விருப்பமாக
கண்டு நடப்பீர்கள் பெண்டிர்களே
ஹக்கன் திருவுளம் பெற்றிடவே

26) கலவி எனும் சேர்க்கை செய்யும்நேரம்
கடுகுபோல் மனம் வெறுத்தாளாகில்
மலைபோல் குவிந்திடும் பாவமென
மன்னன் கிறுபைதான் கிடையாதென

27) அலைபோல் அறிவுள்ள ஆலிம்களும்
ஆதி இரசூல்தான உரைத்தாரென்றார்
குலைவாங் குணமன்றி நற்குணமாய்
கோமான் அருள்பெற்று வாழ்வீர்களே

28) கொழுந்த னுடன்மனங் கூசாமலே
கூபாய் வினோதங்கள் கூறும்பெண்கள்
அழுந்தும் நரகத்தில் கிடப்பாரென்றும்
அவர்க்கு மன்றாட்டு இல்லையென்றும்

29) மன்னன் முனிவான மடந்தையென்றும்
வருகை யுள ஆல நபிஇரசூல்
சொன்ன ரிதுவுண்மை தானெனவே
சுகமாய் இதைக்கேட்டு நடப்பீர்களே

30) குளிர்ந்த குணமாக நடந்த மங்கை
குன்றாப் பெருவாழ்வு வாழ்வாளென்றும்
வளர்ந்த உலமாக்கள் எடுத்துரைத்தார்
வகையா யிதைக்கேட்டு நடந்தபேர்க்கு

---

பளீஹத்து - கேவலம்     கூபாய் - வெகுவாய்

31) அன்ன மளித்திடும் நாயன்தானும்
அதிக றஹ்மத்துச் செய்வானென
வன்ன உலமாககள் வகுத்துரைத்தார்
வகைப் படிகேட்டு நடந்துகொள்வீர்

32) அடவுடன் சோறு கறிகளாக்கி
அணையும் புருசன்தா னுங்கமுன்னே
திடமுடன் அவள் உண்டாளாகில்
செல்வமும் வாழ்வும் சேதமாகும்

33) மடவார் புருசர்க்கு பின்புசித்தால்
வல்லோன் றஹ்மத்து கிடைக்குமென்று
கடல்போல் அறிவுள்ள ஆலிம்கள்தான்
கனதி கிதாபினில் கூறலுற்றார்

34) பெண்ணாய்ப் பிறந்ததோர் பேதையர்க்கு
புருசனிடத்திலே சொர்க்க மென்றார்
எண்ணாமல் இவள் தூஷணித்து
என்னவோ வென்று இருந்தாளாகில்

35) மண்ணி லடங்கின போதுதானும்
மலக்கி லிருவரும் வரும்முதலே
ஒண்ணப் படக்குழி தாநெருக்கி
உடனே நரகத்தில் போடுவார்கள்

36) மனத்தா பமாக இருக்கும் நேரம்
மனைவி கணவன்தன் னிடத்தில் சென்று
சினத்த கணவனை ஆசரித்து
சிங்கார மாக நடப்பாளாகில்



37) அனர்த்தம் விளைக்கின்ற கியாமத்துநாள்
அருஷின் நிழலிலே இருப்பாளென
கனத்த உரையாக ஆலிம்கள்தான்
கனதி கிதாபினில் கட்டுரைத்தார்

38) மற்று உரையாமல் புருசன்சொல்போல்
மனது பிரிசமாய் நடந்தபேர்க்கும்
சற்றுஞ் சறுகாமல் நடந்தபேர்க்கும்
சாகான றஹ்மத்து கிடைக்குமென்று

39) பத்துசிறை கொண்டு உரிமைவிட்ட
பலனும் கிடைக்குமென் றாரிரசூல்
வெத்திநல் உந்தன புருஷனுக்கு
விருப்ப மொடுநன்றாய் நடந்துகொள்வீர்

40) நாலுபேச்சுக்கு ஒரு பேச்சுத்தான்
நல்கப் போதாதோ என்றபேர்க்கு
ஏழுநரகமும் அவளுக்கென்று
எழுதி விடுவானா மிறையவன்தான்

41) ஆளும் இறையவன் அருட்படியே
அடியார் புருசர்க்கு அஞ்சிக்கொள்வீர்
வாழும் உலமாக்கள் வகுத்துரைத்தார்
வகையாய் இதைக்கேட்டு நடந்துகொள்வீர்

42) பயணம் புறப்படும் நேரத்திலே
பரிவாய் மனைவிதன் கணவனிடம்
வயமா யுரையாடி இருந்தவனை
வகையா யனுப்பாம லிருந்தவர்க்கு

---

வயமாய் - ஆசையாய்

43) அயரா இறையவன் கடுங்கோபமும்
ஆல நபியுல்லா தம்முனிவும்
வியலாயிருக்கு மென்றே உரைத்தார்
வேத உலமாக்கள எல்லாருமே

44) எந்த ஒருபண்டம் புருஷன் கேட்டால்
எரிவாய் எடுத்துத்தான் கொடுத்தாளாகில்
முந்தன் லஃனதும் கடும்முனிவும்
மூழும் மிவள் மேலே என்றுரைத்தார்

45) யோகமுள நல்ல பேர்கள் தானும்
உதவி எடுத்துத்தான் கொடுத்தாளாகில்
ஆகமுடன் நல்லசொர்க்க வாழ்வை
ஆதிகொடுப் பானென் றுரிரசூல்

46) அடித்தானே என்று மிகச்சலிப்பாய்
அடவாய்ச் சோற்கறி ஆக்காமலே
கடுத்த மனம்வைத்து இருந்தாளாகில்
கடிதாய் எரிகின்ற நரகத்திலே

47) எடுத்துப் போடென்று மலக்கையேவி
எழுபதாயிரம் வருட மட்டும
படுத்தும் அதாபுதான் தொலையாதென
பார உலமாக்கள் பகாறுற்றுர்

48) பர்த்தா அவள் தனின்பக்சல்வந்தால்
பாவையர் மனம் களிகூர்ந்துதான்
நத்தாசை வைத்தி ராதபேர்க்கு
நாயன் லஃனதும் முனிவுமுண்டாம்

வியலாய் - அதிகமாய்



49) கத்தா வையஞ்சிக் கணவனுக்கு
கல்பு மகிழ்வாக இருப்பாளாகில்
முத்தாம் பதவியில் இருப்பாளென
மேதை முஹப்மது நபியுரைத்தார்

50) வல்லிமார் தங்கள் புருசரோடு
வாகா யிருந்துதான் வாழ்ந்தாளாகில்
நல்ல பதிசொர்க்கம் புகுவாளென
நபிகளுரைத்ததாய் ஹாக்கிம சொன்னூர்

51) அல்லா தனையஞ்சி தொழுதுகொண்டு
அபத்தை யுமகாத்து புருசனுக்கு
பொல்லாக் குணமின்றி நடந்தபேர்க்கு
பொன்னூர் பதிசொர்க்கம் கபூலாக்குவான்

52) வல்லி ஊரினி லிருந்துவந்தால்
வருசைக் கணவனுக் கடிபணிந்தால்
நல்ல பிஸபீல் கெதிரா மென
நாதர் முஹம்மது நபியுரைத்தார்

53) நல்ல படிநடந் தாளில்லையால்
நாளைக் கியாமத்து நாளதிலே
அல்லல் மிகப்படு வாள்எனவே
ஆலநபி இரசூரைத்தார்

54) படைத்த நாயனுக் கடிபணிந்து
பரிவாகத் தோகை மார்கள் தானும்
அடைத்த வாசலைத் திறக்காமலே
அல்லும் பகலுமாய்த் தொழுதாலுமாம்

அபத்தை - மானத்தை

55) புடைத்த பதிசொர்க்கம் தான்தேடியே
பொறுமிப் பொறுமியே அழுதாலுமாம்
சடைந்த புருசனைச் சேரவிட்டால்
சருகுபோல் நன்மை இல்லையென்றார்

56) அறியாத் தாழ்வுகள் பண்ணிவிட்டால்
அந்நேரம் தானே எழுந்திருந்து
நெறியாய் நன்றாக நின்றுகொண்டு
நிகழ்ந்து கொள்ளுவீர் புருசருடன்

57) பரிவாக எந்தன் குற்றமெல்லாம்
படைத்தோன் தனக்காகப் பொறுப்பீரென்றும்
அறிவாக நள்ளுய் அதபு செய்தால்
அல்லா றஹ்மத்து உனக்குண்டாமே

58) விதியோ வென்றுதான் செல்லிவிட்டால்
விஸ்தீர்ன வாழ்வு கிடையாதென்றும்
மதியார்ந்த நல்ல உலமாக்கள் தான்
மன்னு னருட்படி தானுரைத்தார்

59) ஹதியா இதுவென்று கனதியாக
கனமாய் நடப்பீர்கள் கணவனுக்கு
சதியாய் உங்களை பவத்துவந்து
சடுதிப் பிடிக்குமுன் சங்கிப்பீரே

60) அடவுடன் ஒழுச் செய்துகொண்டு
அன்பாய்த் தொழாமுசல் லாவில்வந்தால்
மடவாள் தனை நாடிக் கணவன் தானும்
வாழ்ந்து இருக்கவே அழைத்தானுகில்

புடைத்த - தூய்மையான



61) உடனே அவள் தானும் நல்லதென்று
உடந்தை யாகவே இருந்தாளாகில்
திடமுடன் அவள் தொழுதாளென
தீர்க்கமுள உலமாக்கள் சொன்னார்

62) வசக்கேடு கொண்ட புருசனுக்கு
வருத்தப் பாடேற்று மனைவியவள்
முசுரன்றி மிகப்பாடுபட்டால்
முதலோன் றஹ்மத்தும் நபிமன்றுட்டும்

63) பிசகின்றி இவட்குண்டா மென
பெரியோர் கிதாபினில் பேசிவந்தார்
இசுலா மாகியபெண் பிறந்தோர்
இதனைப் பேணியே நடப்பீர்களே

64) அன்பு மணவாளன் சொல்லைத்தட்டி
அற்பம் சறுகிட வேண்டாமென்றும்
வம்பு குணம்காட்ட வேண்டாமென்றும்
வாழ்த்துங்கோ உங்கள் மக்களுக்கு

65) துன்பக் கருமத்தை நினையாதென்றும்
துதிப்பாய்க் குணமாக நடப்பாயென்றும்
சம்புக் குணமின்றி நற்குணமாய்
சந்தோச மாக அனுப்பிடுங்கோ

66) அருமை யாகவே புருசனுக்கு
அன்பாய் நடந்தபேர் தங்களுக்கு
ஷரபர் நபிமக ளாருடைய
ஷபாஅத்து மிக உண்டாகுமே

ஷரபர் - சிறப்புக்குரியர் ஷபாஅத்து - மன்றுட்டு

67) கப்று தனில்மிக சுகமுண்டாகும்
கடினக் கேள்விகள் அதாபகலும்
தப்ரானி எனும் இமாமுரைத்தார்
சங்கை யுடன்கேட்டு நடந்துகொள்வீர்

68) வேலைசெயும் நேரம் ஹாஜத்துக்காய்
வேந்தன் கணவனு ரழைத்தாராகில
கோலம் பெறமணம் நற்குணமாய்க்
குளிர்ந்து இதமாக நடந்தபேர்க்கு

69) ஆலம் தனையெல்லாம் ஆறுநாளில்
அமைத்த இறையவன் அருளுண்டாமே
சில நபிமகள் பாத்திமாவின
சிறப்பாம் ஷபாஅத்தும் உண்டாகுமே

70) எழு இரவுதான் ஓரிரவாய்
ஏக பெரியோனைக் செஞ்சினுலும்
ஆளும் கணவன்தன் சொல்தட்டினுல்
அறுசு நிழலும்தான் அவளுக்கில்லை

71) வாழும் முஹம்மதர் கல்யாணத்தில்
வந்து கூடவும் மாட்டாளென
தாழும் மனைவியார் தங்களுக்கு
தப்பிரான் நபி சாற்றினரே

72) புருசன் கோபித்து அடித்தநேரம்
பூவை யொருவார்த்தை பேசாமலே
பிரிசமுடன் கண்ணீர் துடைத்துப்போட்டு
பெரிதும் களிகூர்ந்து இருப்பாளாகில்

---

ஆலம் - உலகம் ஷபாஅத் - மன்ருட்டம்



85) தண்மை யனுகாமல் தாழ்ச்சிசெய்து
தகுமாய் நடப்போர்கள தங்களுக்கு
நன்மை மிகஉண்டாம் நாளையென
நாயன் திருவுளம் பற்றினனே

86) வரிசையுள தோகை மாலைதனை
வாகா யுரைத்திட்டேன் வல்லியர்கள்
உருசி யுடன்கேட்டு நடந்துவாழ்ந்தால்
உடையோன் கிறுபை உண்டாகஆமீன்

87) அறுசை படைத்தவன் கிறுபையற்றோர்
ஆன கணவனுக் கடிபணியார்
கஞ்ச மிகவுள்ள காபிரோடே
கடின அதாபுடன் இருக்கஆமீன்

88) தோகை எனும்மாலை கேட்டபேர்க்கும்
துய்தா யதன்படி நடந்தபேர்க்கும்
ஏகன் றஹ்மத்தும் நபிமன்ருட்டும்
யவ்முல் கியாமத்தில் விளைகஆமீன்

89) வாகாய் நபிசொன்ன ஹதீதைக்கேட்டு
வடிவாய் நடந்தபேர் தங்களுக்கு
மாக முழுதையும் அமைத்தஇறை
மன்ஞன் றஹமத்துண் டாகஆமீன்

90) அல்லாஹ் தீதாருண் டாகஆமீன்
அண்ணல் ஷபாஅத் துண்டாகஆமீன்
சல்லல் லாவெனும் றஹ்மத்துடன்
கனத்த பறக்கத்துண்டாக ஆமீன்

91) நல்லார் துஆப்பேறுண் டாகஆமீன்
நாயன் தனையஞ்சி வணங்கினோர்க்கு
பொல்லா இபுலீசு கல்புதன்னில்
புகுதாமல் அல்லா காவல் ஆமீன்

o-: நிறைவு. :-o

(இன்ஷா அல்லாஹ்) அடுத்து வெளியிடவிருக்கும்
“ **கல்யாண பித்அத்து மாலையில்** ” நின்றும்
**ஐந்து பாடல்கள்.**

கொட்டும் குரவையும் ஆணும்பெண்ணும்
கூடி ஒருதலம் தனிற்கலந்து
தொட்டுத் திரிவது காபிர்கள்தன
தோஷக் குபிர்கூட்டக் குணமாகுமே

மங்கைதனை மணவாளன் தன்னை
வடிவாக்கிப் பந்தல் தன்னிலேற்றி
சங்கை இதுவென்று பார்ப்போர்கள்தாம்
தமிழர் தனில்கெட்ட தமிழர்களே

வீணில் உடமையைச் செலவழிப்போர்
வீணன் இபுலீஸின் இக்வானென்று
ஆணில் அழகான நபிதமக்கு
ஆதி குர்ஆனில் அருளிச்செய்தான்

சங்கை யுளநல்ல முஸ்லிம்களே
சாமும் மனிதர்க்கு இவ்வினையெல்லாம்
சங்கை அல்லவென் றிதனைக்கண்டு
தண்மை குணமவிட்டுத் தவிர்வீர்களே

உடமைச் சேதமும் உடற்சேதமும்
உண்டாம் வினையெல்லாம் விட்டொழித்து
அடிமைத் தனம்செய்து பாபம்விட்டு
ஆதித் திருவுளம் பெறுவீர்களே

---

அடிமைத்தனம் - இறைவன் ஏவல் முறை நடப்பது.



73) சுருதி மூவெட்டு ஹஜ்ஜுசெய்த
கனதி கிடைக்குமென் றுரிரசூல்
மறுவின் பேதைபோ லாகாமலே
மன்ன னுடன் வாழ்ந்து இருப்பீர்களே

74) படைத்த நாயனுக் கடிபணிந்து
மரிவாய்த் தோகையர் தொழும்நேரங்கள்
கிடைத்த புருசனுக் காகவேண்டி
கையேந்தி துஆச் செய்யவேண்டும்

75) ஆத்து மாவெல்லாம் ஒடுங்குமட்டும்
அந்தப் படிசெய்து நாளபோக்கினால்
ஏற்றமாகவே ஹூறுலீன்கள்
இயல்பா யுனக்குநல் வரிசைசெய்வார்

76) இந்தப் படியாக எந்நேரமும்
இறையைத் தொழும்போது துஆஇரந்தால்
அந்தமாகவே ஒளிவிறங்கும்
அல்லா உனக்குநல் வரிசைசெய்வான்

77) சொந்த மானநற் புருஷனோடு
சொற்கம் தனிலேயும் புகுதலாமே
வந்த ஹதீதுகள் எல்லாற்றையும்
வகையாகக் கேட்டு நடப்பீர்களே

78) அடவாய்ப் புருசனார் சபறில்லேகி
அனேக நாள்மட்டுஞ் சென்றதாகில்
மடவாள் குறைவைத்து மனமடிவாய்
வாயால் மொழிந்திட்டால் வந்திடுமோ

79) குடல்வாய் பசியாற்றி இறையோன்பக்கல்
கோதைமார் துஆச் செய்துகொண்டால்
திடமா யுனக்குநல் உதவியாக
துணைவர் பதிவந்தே சேர்ந்திடுவார்

80) கணக்கா யிப்படி நடக்காவிட்டால்
கடுகுபோல் நன்மை இல்லையென
மணக்கு முஹம்மது நபியிரசூல்
மகியின் மனிதற்கு மொழியலுற்றூர்

81) இணக்க மாகவே சப்றுசெய்து
இருந்த தோகைமார் தங்களுக்கு
குனுக்கு மேலொலித் தோடுகின்ற
கொடிய அதாபுகள் இல்லையென்றூர்

82) கண்டால் தலைவனை யாதரித்து
கனமாய் நடந்தோர்க்கு காவல்ஆமீன்
வண்டார்க் குழலிதன் மன்னனுடன்
வணக்கமாகவே வாழ்க ஆமீன்

83) தண்டாக் குணமின்றி துணைவனுக்கு
தாழ்ந்து நடந்தோர்கள் வாழஆமீன்
சண்டைப் பிணக்கின்றி இருந்தபோர்கள்
சாகான் முன்னிலே முடுகஆமீன்

84) வன்மையுள தோகை மாலையிதை
வாயா லுரைத்திட்டேன் வல்லியர்கள்
உண்மையுடன் கேட்டு நடந்துகொண்டால்
உடையோன் கிருபைஉண்டாக ஆமீன்

---

குனுக்கு - ஈயம், குடல்வாய் - நெருங்கிய உறவினர்கள்